## சிவப்புக் கயிறு

வாசிக்க: யோசுவா 2:1-21

*“விசுவாசம் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்”*
*(யாக் 2:17)*

நற்செயல் ஏதுமில்லாமல் விசுவாசம் இரட்சிக்கும் என்கிறார் பவுல் (எபே 2:8,9). நற்செயல் இல்லாத விசுவாசம் செத்தது என்கிறார் யாக்கோபு. மேலெழுந்தவாறு பார்த்தால் இரண்டும் முரண்பட்டதாகத் தோன்றும். ஆனால் முரண்பாடு இல்லை என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டு விளக்குகிறது.

“விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடு அழியாதிருந்தாள்” (எபி 11:31). எபிரெயர் நிருபம் எழுதப்பட்ட அன்று சரித்திரத்திலேயே இவள் தோன்றி ஏறக்குறைய 2000 ஆண்டுகட்குமேல் ஆகியிருந்தும் இவள் வேசி என்றே அழைக்கப்படுகிறாள். அவளது பாவத்தின் கறை அவ்வளவு இறுகியது. ஆனாலும் விசுவாசத்தினாலே அவள் காக்கப்பட்டாள். இஸ்ரவேலரில் இருவர் எரிகோ நகரை உளவுபார்க்க வந்தபோது, அவள் வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே அவர்களை மறைத்து வைத்து, எதிரிகளிடமிருந்து காப்பாற்றினாள். புறவினப் பெண்ணாகிய அவளது விசுவாசம் ஆச்சரியமானது. உளவுகாரரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவள் ஒரு சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டிவைத்தாள் (யோசு 2:21). அவளது பாவம் கருஞ்சிவப்புதான்! ஆனாலும் அந்தச் சிறிய சிவப்புக் கயிறு—அவளது எளிய விசுவாசம்—அவளை இரட்சித்தது. தாவீது அரசனின் முற்பாட்டனாகிய போவாசைப் பெற்றெடுக்கும் பாக்கியத்தை அவள் பெற்றாள். எபிரெயர் 11ஆம் அத்தியாயத்தில் விசுவாச வீரர் பட்டியலில் இடமும் பெற்றாள். அவளைவிட அதிமேன்மையான மக்கள் பலருக்கும் கிடைக்காத சிலாக்கியம்! எளிய விசுவாசத்தின் மேன்மைதான் என்னே!

“அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்டபோது, நற்செயல்களினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?” (யாக் 2:25). ராகாப் அந்த வேவுகாரரைச் சந்தித்தபின்தான் யேகோவாவை நம்பினாளா? இல்லை, அதற்கு முன்பே அவர்மீது விசுவாசம் வைத்திருந்தாள். “அந்த மனிதர் படுத்துக்கொள்ளுமுன் அவள் வீட்டின் மேல் அவர்களிடத்திற்கு ஏறிப்போய், கர்த்தர் உங்களுக்கு இந்நாட்டை ஒப்புக்கொடுத்தாரென்று ... அறிவேன் ... உங்கள் தேவனாகிய கர்த்தரே மேலே விண்ணுலகம் முதல் கீழே மண்ணுலகம் அனைத்திற்கும் கடவுள்” என்றாள் (யோசு 2:8,9,11). ஆண்டவர் மீது அவளுக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கைதான் என்னே! ஆம், அவளுக்கு ஏற்கெனவே உறுதியான விசுவாசம் இருந்தது. அந்த விசுவாசத்தை வெளிக்காட்டும் செயலாகத்தான் அந்த ஒற்றரை அவள் ஏற்றுக்கொண்டாள், அவர்களை மறைத்துவைத்தாள், ஜன்னல் வழியே இறக்கி அனுப்பிவிட்டாள்.

எனவே, “கிரியை” என்று யாக்கோபு குறிப்பிடுவது கடவுளுடைய கிருபை, இரக்கத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் நற்செயல்கள் அல்லது மார்க்கச் சடங்குகள் அல்ல; ஆனால் விசுவாசத்தினாலே இறையருளைப் பெற்றுக்கொண்ட நாம் தேவப்பிள்ளைகள் என்று நிரூபணமாய்ச் செய்யும் காரியங்களாகும்.

*விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு;*
*இரட்சிப்பின் நிரூபணமாய் நற்செயல்கள்!*